
# இந்து

## ஆரணம்

### சித்தர் ஆன்மீக மாத இதழ்

இந்து : 1 ஏப்ரல் வெளியீடு விலை ரூ. 3-50 ஆரணம் : 7



ஆசிரியர் : அருட்சேனை தளபதி கு. இரவிமணி B.Sc. B. Tech

# காளி காயந்திரி மந்தரம்

ஓம் காளி தேவியே! காயமே வித்தைகளின் விளை நிலமாக்கிடுக!
தாயே, நீயே, தீயாகி மகிழ்ந்திடுக! அருளிடுக!
என்னைத் துன்புறுத்துவனவற்றைப் பிறப்பற்றனவாக்கிடுக!
அனாதி நீயே! ஆதிநீயே! பாதிநீயே! மீதிநீயே!
வாழ்த்துகிறோம், வணங்குகிறோம், ஏற்றிடுக, காத்திடுக!

**

# காளி காயந்திரி மந்திரம்

1 பசிய தலைமாலை பூண்டு ஈசனை வென்றவளே!
2 வசிய மண்டையோட்டு மாலை பூண்டு அண்டம் காப்பவளே!
3 நசியத் தீமைகளைத் தீய்க்கும் குருதிப்பலி விருப்பத்தாளே!
4 ஆத்தாளே! அம்மையே! அன்னையே! தாயே! சத்தியே!
5 மருதக்காளியே! அருவக்காளியே! உருவக்காளியே!
அருவுருவக் காளியே!
6 கருக்காளியே! குருக்காளியே! தருக்காளியே! திருக்காளியே!
7 சூலத்தாளே! பாராங்குசத்தாளே! தாமரையாளே! அருட்கையாளே!
8 இருகையே நாலாகி! ஆறாகி! எட்டாகிப் பத்தாகி!
9 பன்னிரண்டாகி! பதினாலாகிப் பதினாறாகி! பதினெட்டாகி!
10 இருபதாகி! முப்பத்திரண்டாகி முப்பத்தாறாகிடும் கோலமயிலே!
11 சிங்கமமர்பவளே! முக்கண்ணளே! கட்டழகியே! கருமேனியளே!
அருட்சுடரே!
12 வறுமை யொழித்திடு! தடையுடைத்திடு! சிந்தை காத்திடு!
நெஞ்சு போற்றிடு! வெற்றி வழங்கிடு!

தலையங்கம்

# எல்லா மதங்களும் சமமானவையா?!

# எம்மதமும் சம்மதமா?!

இந்த உலகிலேயே தங்களுடைய நாட்டுக்கென்று உரிய மதத்துக்கு அரசியல் பூர்வமான உரிமையும்; பெருமையும், பாதுகாப்பும் தரப்படாத ஒரே ஒரு நாடு இந்தியாதான்! இந்தியாதான்!! இந்தியாதான்!!!

இதற்குக் காரணம், அநேகமாக, இந்திய விடுதலைப் போராட்டகாலத்திலிருந்து இன்றுவரை உள்ள அரசியல்வாதிகளில் நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது பேர்களுக்கு மேல் நாத்திகர்களாக, இந்துமதத்தை மட்டும் மறுப்பவர்களாக, வெறுப்பவர்களாக, எதிர்ப்பவர்களாக, அந்நியமதங்களைப் பாதுகாக்கும் வேலிகளாக, அந்நிய மதத்தவர்களின் கங்காணிகளாக, எடுபிடிகளாக இருந்து வருவதுதான், இருந்து வருவதுதான், இருந்து வருவதுதான்.

இந்துமதத்துக்கு உரிய இந்துவேதத்தை இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளிலும் அச்சிட்டு அதிகப் படிப்பறிவில்லாத பாமரர் முதல் அதிகப்படிப்பறிவுள்ள பண்டிதர், புலவர், அறிஞர், மேதை, முதலியோர் அனைவரும் அக்கறையோடும், ஆர்வத்தோடும் படிப்பதற்கு எளிமையாகவும், இனிமையாகவும் எழுதி வெளியிடாததுதான்.

இன்றைக்கு, இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும் தெரிந்தவர்கள் அதிகம் இல்லாததால்; சாதிப்பிரிவுகள், சாதிவெறிகள், சாதி ஏற்றத்தாழ்வுகள், சாதித்தீண்டாமைக் கொடுமைகள், வருணாசிரமதருமங்கள் பெரிதாகப் பேசப்படுகின்றன. ஆதிசிவனார், அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியான முத்தமிழ் மொழியில் இந்துவேதத்தை அருளியதற்குக் காரணமே; இந்த உலகில் எண்ணூறுக்கும் மேற்பட்ட வேதங்களும், வேதமதங்களும், மானுட இனங்களும், நாடுகளும், தனித்தனியாகப் பிரிந்து ஒன்றோடு ஒன்று பகைமையை ஏற்றத் தாழ்வை, தீண்டாமையை, வளர்த்துக் கொண்டு, சண்டைச் சச்சரவுகளையும், போராட்டங்களையும், போர்களையும் வளர்த்துக்கொண்டு அழிவுகளையும், இழிவுகளையும், அமைதியின்மைகளையும், நிம்மதியின்மைகளையும் வளர்த்திட்டது தான்.

அதாவது, இந்த உலகில் எல்லா இனத்தவர்களையும் நாட்டவர்களையும், மொழியினர்களையும், மதத்தவர்களையும் ஒற்றுமைப்படுத்தி, சமாதானப்படுத்தி, ஒருமைப்பாட்டுடனும், சகோதரத்தத்துவத்துடனும், சமத்துவத்துடனும் ஒருவருக்கொருவருதவிக்கொண்டு வாழும் கூட்டுறவு வாழ்வைப் பெறுமாறு செய்வதற்காகவே; ஆதிசிவனார், கடவுள்களைப் பற்றி, அருளுலகில் உள்ள வாழ்வியல்களைப் பற்றி, மானுடர் பத்தியால் சத்தி சித்திமுத்திகளைப் பெறுவது பற்றி, மனித முயற்சிக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்ட மானுட வாழ்வியல் பாதிப்புகள்

பற்றி, அதற்குரிய பரிகாரங்கள் பற்றி அனைத்தையும் விளக்குகின்ற இந்துவேதத்தையும், சடங்கியலாக நடைமுறைப்படுத்தித் தரும் இந்து மதத்தையும் அருளினுர்,

இப்படி இருந்தும், இன்றைக்கு எல்லா மதங்களும் ஒரே உண்மையைத்தான் கூறு கின்றன என்று துணிந்து பொய்கூறிவருகின்றுர்கள் இந்திய அரசியல்வாதிகள். இதற்குக் காரணம், அவர்களுடைய தன்னலவெறி, பேராசைவெறி, புகழ்வெறி, பதவிவெறி, கட்சிவெறி முதலியவைகள் தான். எனவே, எல்லா மதங்களும் ஒன்றுதான் என்றுல்; கடவுள்களின் பெயர்கள் வேறுபடுவது ஏன்? பூசைமுறைகள் வேறுபடுவது ஏன்? சடங்குகள், சாத்திரங்கள் வேறுபடுவது ஏன்? உடை, உணவு, உறவு, படையல் வேறுபடுவது ஏன்? மதத்தின் பெயரால் தனித்தனி அமைப்புகள் ஏன்? மதமாற்றங்கள் ஏன்? மதச் சண்டைகள் ஏன்? என்ற வினுக் களுக்கு பதில் சொல்லுமாறு அரசியல்வாதிகளை வற்புறுத்தினுல்தான்; அவர்கள் திருந்துவார் கள். இந்த வினுக்களுக்கு விடைகூறுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொண்டால்தான்; பொது மக்கள், அரசியல் வாதிகளும், அரசியல் கட்சிகளும் ஏமாற்றுவதைப் புரிந்து கொள்வார்கள்.

இந்தியாவின் வறுமையும், வெறுமையும் அகன்றிட, இந்தியநாட்டுப் பொருள்களையே வாங்கவேண்டும் (BE INDIAN; BUY INDIAN) என்று கூறுபவர்கள்; "இந்தியப் பண்பாட்டிற் கும், நாகரிகத்திற்குமுரிய இந்தியாவின் மதமான இந்துமதம் தான், இந்தியாவிற்குத் தேவை இந்தியாவின் வறுமைகளையும் வெறுமைகளையும் போக்குவதற்கு" என்று கூற பயப்படுவது ஏன்?

அதாவது! "எல்லோரும் இந்தியர்களாக இருங்கள் என்ற அறிவிப்பு போலியானது, பொய்யானது, ஏமாற்றுவதற்குரியது. ஏனென்றுல், எல்லோரும் இந்துக்களாக இருந்தால் தான் இந்தியர்களாக இருக்கமுடியும். 'இந்துக்கள் என்றுல் இந்தியர்கள்; இந்தியர்கள் என்றுல் இந்துக்கள்' என்று பொருள்.

இந்தியாவில் உள்ள அந்நிய மதத்தவர்கள். தங்களை அந்நியர்களாகத்தான் நினைக் கிறுர்கள். இன்னும் சொல்லப் போனுல், இந்தியாவில் உள்ள அந்நியமதத்தவர்கள், இந்தியா வையே, தங்களுடைய மதம் தோன்றிய அந்நிய நாட்டிற்கும், அந்நிய மக்களுக்கும், அந்நிய மக்களுடைய அரசாங்கத்திற்கும் அடிமைப்படுத்திடத்தான் முயலுகிறுர்கள். அதாவது, இந்தியாவில் உள்ள அந்நியமதத்தவர்கள், தங்களை இந்தியர்களாகவே ஒப்புக் கொள்வ தில்லை. இந்தியாவைத் தங்கள் தாய்நாடு என்று நம்புவதில்லை; விரும்புவதில்லை, இதுதான் உண்மை!.

இந் நிலையில், இந்துமத அரசியல்வாதிகள் மட்டும் 'எம்மதமும் சம்மதம்' என்று கூறுவது எப்படி உண்மையாகும்?; எப்படி உண்மையாகும்!!; எப்படி உண்மையாகும்!!.

எம்மதமும் சம்மதம் என்று கூறும் இந்திய அரசியல்வாதிகள்; ஒவ்வொரு மதத்தின் பெயராலும் அரசியல் கட்சிகள் செயல்பட அனுமதிப்பது ஏன்? ஒவ்வொரு மதத்தையும் காப்பாற்ற தனிப்பட்ட சலுகைகளையும், உரிமைகளையும் சட்டப்படி வழங்குவது ஏன்?

இன்னும் எவ்வளவு காலம்தான், இந்துமத அரசியல்வாதிகள் எம்மதமும் சம்மதம் என்று கூறி இந்துக்களை ஏமாற்றப் போகிறுர்கள்? இந்தியாவை, அந்நிய மதத்துக்குரிய நாடு களுக்கு காணிக்கையாக்கப் போகிறுர்கள்?

சிந்திப்பீர்! சிந்திப்பீர்!! சிந்திப்பீர்!!!

# அறிவியல் சமயத்தைப் பொய்யாக்குகிறதா? அன்றி மெய்யாக்குகிறதா? (சமயமும் அறிவியலும்)

தொகுப்பு : அருள்மிகு அருட்போர் வியூக நாயகம்
வேம்பை சீ. மணி

சென்ற மாத இதழ் தொடர்ச்சி

**'நீர்'** பற்றிச் சமயம் கூறுவதை நோக்குவோம். சமயத் தத்துவங்கள் இயற்கையை அப்படியே வணங்குவதில் பேரளவு ஆர்வம் காட்டுகின்றன. இயற்கையின் எழிலும், வளமும், வலிவும், வள்ளன்மையுமே இறைவனின் பெரிய நிலைகளை விளக்குதற்குரிய சான்றுகள் என்று எல்லாச் சமயங்களுமே கருதுகின்றன.

இச்சமயக் கருத்துக்குப் பெருமை சேர்ப்பது போன்றதே, நீரின் நிலை. மழையாகப் பெய்யும் நீர், அருவியாகக் கொட்டும் நீர், ஆருக ஓடும் நீர், ஏரிகளாகவும், குளம், குட்டைகளாகவும் தேங்கி நிற்கும் நீர், ஓயாது அலையெழுப்பி நடம்புரிந்து ஒலியெழுப்பி இன்னிசை பாடிடும் கடல்நீர்..முதலிய எல்லா நீர்களுமே குளுமையையும், எழிலையும், வாழ்வின் தேவைகளை வழங்குதலையும் தங்களிடம் பெற்றுத் திகழ்கின்றன. எனவே, இவை இன்னருள் புரியும் இறைவனுகவே மதிக்கப்பட்டு வழிபடும் தகுதிகளைப் பெற்றுவிடுகின்றன. சமய மறுப்பாளர்கள் இப்படி நீர்நிலைகளை வணங்குவதைக் கேலியும் கிண்டலும் செய்தனர். அறிவியல் வளர்ந்தது, நீரின் இயக்கமே மின் சத்தியாயிற்று, இம்மின்சத்திதான் அனைத்துத் தொழில் வளர்ச்சிக்கும் நாகரீக வாழ்வுக்கும் பெரிய தன்மையையும் விளக்குவதாயிற்று. அத்துடன், அறிவியல் எவ்வளவுதான் வளர்ந்தாலும், உப்புநீரை நல்ல நீராக மாற்றவே முடியாது என்ற பேருண்மை சமயத்தின் தத்துவங்கள் முடிந்த முடிவானவை, பெரிய நுட்பமானவை என்பதை விளக்கிற்று. அதாவது, இறைவனுல் படைக்கப்பட்ட இயற்கை மனித முயற்சியால் வளர்க்கப்பட்ட அறிவியலால் வெற்றி கொள்ளமுடியாத ஒன்ருகும் என்பதேயாகும். எனவே, சமயம் அறிவியலை விட உயர்ந்தது, நுட்பமானது, திட்டவட்டமானது. உண்மை மிகுந்தது என்ற பேருண்மை மிகத் தெளிவாக விளக்குகிறது.

இறுதியாக மண் பற்றிச் சமயம்கூறுவதை நோக்குவோம்; இம்மண் பற்றிக் கூறும்போது சமயம், "விண்ணும், காற்றும், நெருப்பும், நீரும் படிப்படியாக இணைந்து உருவான இறுதி நிலையே மண் என்று குறிக்கின்றது. விண்வெளியில் காற்று மிகுந்து சுழல் காற்று உருவாகி அது நெருப்பாயிற்று. பற்றி எரிந்த நெருப்பு ஒரு மாபெரும் கோளமாயிற்று. அக்கோளம் ஒரு நூறு கோடியாண்டு சுடர்விட்டு எரிந்து அவிந்ததும் குளிர்மிகு பனிக்கட்டிக் கோளம் ஒன்று உருவாயிற்று. அப் பனிக்கட்டிக் கோளம் ஒரு நூறு கோடியாண்டு சுழன்று உருகி இறுதியில் நீர்க் கோளமாயிற்று. அந்நீர்க் கோளமும் ஒரு நூறு கோடியாண்டு சுழன்று சுழன்று நீர் வற்றிட ஆங்காங்கே கற்பாறைகள் வெளிப்பட்டு பெரிய மலைகளும், குன்றுகளும், மண்ணும் தோன்றின. அதன் பிறகு, உடலற்ற உயிர்களும், உடலுடைய பயிர்களும் தோன்றி வளரலாயின. இப்படி நீரிலிருந்து மண் தோன்றிட ஒரு நூறு கோடியாண்டு ஆயிற்று. அதாவது, நானூறு கோடியாண்டுகளாகிய பிறகு மண் தோன்றியது. அந்த மண்ணில் உடலற்ற உயிர்களும், உடலுடைய பயிர்களும் தோன்றி இன்றைய மனிதஇனம் தோன்றிட ஒரு நூறு கோடி ஆண்டுகளாயின. எனவே, இன்றைய உலகம் உருவாகிட ஐந்நூறுகோடி ஆண்டுகளாயின. எனவே. இப்படி ஐந்நூறு கோடி ஆண்டுகளாக வளர்ந்த பயிரினங்களும் உயிரினங்களும் நீருக்குள்ளும் மண்ணுக்குள்ளும் நிறைந்திட்டன.

(தொடரும்)

# திருவள்ளுவரின் கடவுட் கொள்கை

மிகத்தெளிவாக திருவள்ளுவரின் கீதை, திருமூலரின் கீதை, யக்ஞவல்லியின் கீதை, ஆதியக்ஞவல்லியின் கீதை, ஆதிக்கம்பரின் கீதை, கம்பரின் கீதை, வால்மீகியின் கீதை, ஆதிவால்மீகியின் கீதை, தன்வந்திரி கீதை, ஆதிதன்வந்திரி கீதை, கண்ணன் கீதை, கன்னன் கீதை, பெருந்தேவனார் கீதை, ஆதிப் பெருந்தேவனார் கீதை தொல்காப்பியர் கீதை, ஆதித்தொல்காப்பியர் கீதை, அகத்தியர் கீதை ஆதி அகத்தியர் கீதை, நக்கீரர் கீதை, ஆதி நக்கீரர் கீதை .... என்ற நூல்கள் சிறப்பாகப் பாராட்டப்படுகின்றன, குருபாரம்பரியத்தில். மேலும் இக் குருபாரம்பரியத்தில் மேல் குறிப்பிட்ட அனைவரும் நவநாத சித்தர்கள் என்று குறிக்கப்படுகின்றனர். அத்துடன் ஒட்டு மொத்தமாக இந்த நவநாதசித்தர்களின் கதைகளும், காதைகளும் (காப்பியம்), காவியங்களும் சுவை மிக்கவை என்று பாராட்டப்படுகின்றன. "திருமூலரையும், திருவள்ளுவரையும், சமயத்துக்கும், சமுதாயத்துக்கும் இலக்கண இலக்கியம் கண்ட தெய்வப்பாவலர்" என்று சிறப்பிக்கும் சொற்றொடர் பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் குருபாரம்பரியத்திலும், இலக்கியபாரம்பரியங்களிலும், அரசபாரம்பரியங்களிலும், மற்றவாக்குகளிலும் வாசகங்களிலும் வாக்கியங்களிலும் பலமுறை திருப்பித்திருப்பி கை--யாளப்பட்டிருக்கின்றது. எனவே திருவள்ளுவரும், திருமூலரும், தொல்காப்பியரைப்போல் மொழிக்கும்; இலக்கியத்திற்கும் இலக்கண நூல் எழுதியிருக்கின்றனர் என்று கருத வேண்டியிருக்கிறது.

திருவள்ளுவரும், திருமூலரும் பல இலக்கியங்கள் எழுதியிருக்கின்றார்கள் என்ற செய்தியும் சித்தர்களின் நூல்களில், தாராளமாக காணப்படுகின்றது. இவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது திருவள்ளுவரும், திருமூலரும் கி.மு. 9ஆம் நூற்றாண்டில் பிறந்திருப்பர் என்று எண்ணமுடிகிறது, ஆனால், திருமூலரைப் பற்றி அவர் 300 ஆண்டுகள் வாழ்ந்தார் என்ற செய்தியொன்று இருக்கிறது. இச்செய்திக்குத் துணையாகவே குரு பாரம்பரியத்தில் " கலியோடு கலிதீர்க்க திருமூலனும் தோன்றினன்" என்ற குறிப்பு மிகத் தெளிவாக குருபாரம்பரியத்திலும், இலக்கிய பாரம்பரியத்திலும். இருக்கிறது. இதன்படி பார்த்தால் திருமூலர் 128 ஆண்டுகளே வாழ்ந்த திருவள்ளுவருக்கு முன்பே தோன்றி அவருக்குப் பின்னும் வாழ்ந்திருப்பார் என்று எண்ண வேண்டியிருக்கிறது. இதே செய்தி கலியுகத்தின் வரலாறு கூறும் சித்தர்களின் நூல்களில் மிகத்தெளிவாக இருக்கிறது. 11வது பதினெண் சித்தர் பீடாதிபதி தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டிய குருமகா சன்னிதானம் சித்தர் கருவூரார் அவர்களும் அவரது மகன் கருவூர்த் தேவனும், பேரன் திருமாளிகைத் தேவனும், திருவாடுதுறையில் உள்ள திருமூலரின் நிலவறைக் குகைக்கோயிலில் பூசை செய்த விபரங்களும் அவர்கள் திருமூலரைப் பற்றி புகழ்ந்து கூறிட்ட செய்திகளும், வாசகங்களும் குருபாரம்பரியம், இலக்கியபாரம்பரியம், மூவர்உலா அல்லது மூவர்தோற்றம், கருவறை உயர்கோபுரக் கோயில்கள் அருட்பேரரசு முதலிய பல நூல்களில் இருக்கின்றன. எனவே, திருமூலரின் வரலாற்றை நன்கு ஆராய்ந்தால், அதில் திருவள்ளுவரின் வரலாறு மிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் கிடைக்கும்! கிடைக்கும்!! கிடைக்கும்!!! கருவூரார் வழி வந்த கண்டப்பக்கோட்டைச் சித்தர் உ. இராமசாமிப் பிள்ளையவர்கள் தெய்வப்பாவலர் திருமூலரையும், திருவள்ளுவரையும், தெய்வமென வழிபட்ட குறிப்புக்களும், செய்திகளும் நிறைய இருக்கின்றன. எனவே இவர் மேற்படி திருமூலர், திருவள்ளுவர் பற்றிக் கூறும் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளத் தக்கனவே, இவை ஏளனம்பட்டியார் வரலாற்றில் விளக்கப்படுகின்றன என்பதால் இக்கட்டுரையில் திருமூலர் காலத்தையும், திருவள்ளுவர் காலத்தையும், இவர்களின் இலக்கண, இலக்கியங்களையும் ஆராயப்போகிறவர்கள் சித்தர் ஏளனம்பட்டியாரின் எழுத்துக் குவியலையும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று இக்கட்டுரையில் மேற்படிச் செய்திகளைக் குறித்தோம்.

(தொடரும்)

# இராமலிங்க அடிகளார் பற்றிய புதிய கண்ணோட்டம்

இந்த அளவு இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் தெரிந்த ஓர் பெரிய அருளாளராக, விளங்கிய அருட்பெருஞ்சோதி ஆண்டவர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் தொகுக்கப் படாமல் போனது ஏன்? வள்ளலார் பாடிய அருட்பாக்கள் 399, பதிகங்களையும், 5818 பாடல்களையும் கொண்டது. இது ஆறு திருமுறைகளைக் கொண்டு, விளங்குகின்றது. வள்ளலாரைப் பற்றி மேலும் ஆராய முற்படுவதற்கு முன் திருவருட் பா வில் வள்ளலார் அவர்கள் பாடியுள்ள திருத்தலங்களையும், தெய்வங்களையும், நோக்குவோம்.

| தலம் | தெய்வம் |
|---|---|
| கந்தகோட்டம் (சென்னை) | முருகன் |
| திருத்தணிகை | முருகன் |
| புள்ளிருக்கும் வேளூர் | முருகன் |
| திருவேரகம் | முருகன் |
| திருவொற்றியூர் | தியாகராசர், ஒற்றியூரார் |
| திருமுல்லைவாயில் | மாசிலாமணி ஈசர் |
| திருவொற்றியூர் | எழுத்தறியும் பெருமான் |
| திருவொற்றியூர் | அறுமுகப் பெருமான் |
| தில்லை | சங்கரர் |
| | இராமர் |
| திருஎவ்வுளூர் | வீரராகவர் |
| சென்னை (ஏழுகிணறு) | இரேணுகை |
| தில்லைச்சிற்றம்பலம் | சுயம்சோதி |
| திருவேட்களம் | பொற்சடையான் |

எதையும் உடனுக்குடன் ஈட்டமுண்டா? இழப்பு வருமா?
என்றே பொருள் நோக்கு கொண்டு பார்க்காதே.

| | |
|---|---|
| திருநெல்வாயில் | உச்சியார் |
| திருக்கழிப்பாலை | பவள வண்ணர் |
| திருநல்லூர்ப் பெருமணம் | வெண்ணீறுகந்தார் |
| திருமயேந்திரப் பள்ளி | அரவரை அழகன் |
| தென் திருமுல்லை வாயில் | முல்லைவனநாதர் |
| திருக் கலிக்காமூர் | சுந்தரேசர் |
| திருச்சாய்க்காடு | சாய்காட்டான் |
| திருப்பல்லவனீச்சரம் | — |
| திருவெண்காடு | வெண்காடுடையார் |
| கீழைத் திருக்காட்டுப் பள்ளி | ஆரணிஈசுவரர் |
| திருக்குருகாவூர் | திருவெள்ளடை உடையார் |
| சீர்காழி | திருத்தோணிபுரமுடையார் |
| திருக்கோலக்கா | ஓசை கொடுத்த நாயகர் |
| புள்ளிருக்குவேளூர் | வைத்திய நாதர் |
| திருக்கண்ணார் கோயில் | கண்ணாயிர நாதர் |
| திருக்கடைமுடி | மதிசூடு சென்னிக்கடவுள் |
| திருநின்றியூர் | அழகார் |
| திருப்புன்கூர் | சிவலோக நாதன் |
| திருநீடூர் | அருட் சோமநாதர் |
| திருஅன்னியூர் | ஆபத்சகாயர் |
| திருவேள்விக்குடி | வீங்குநீர் துருத்தியார் |
| திருஎதிர்கொள்பாடி | அயிராவத நாதர் |
| திருமணஞ்சேரி | பரமன் |
| திருக்குறுக்கைவீரட்டம் | மகாதேவர் |
| திருக் கருப்பறியலூர் | குற்றமறியாத பெருமான் |
| திருக் குரக்குக்கா | ஆலமர் செல்வனார் |
| திருவாழ்கொளிபுத்தூர் | மாணிக்க வண்ணர் |
| மண்ணிப் படிக்கரை | நீலகண்டர் |
| திருவோமாம் புலியூர் | வரும் துயரம் தீர்த்த நாயனார். |

(தொடரும்)

# மகா சிவ ராத்திரி

## சிவராத்திரி பற்றிய இந்துவேதச் செய்திகள்:

(1) கல்தோன்றி, மண்தோன்றாக் காலத்திலே மூலப் பதினெண் சித்தர்கள் குழு இம் மண்ணுலகில் வந்து இறங்கிய இரவு

(2) இம் மண்ணுலகில் பயிரினம், உயிரினம் தோன்ற ஆரம்பித்திட்ட இரவுதான்

(3) பயிரின, உயிரினங்களுக்கும், இம் மண்ணுலகிற்கும் தலைவராக மனிசர் தோன்ற ஆரம்பித்திட்ட இரவு

(4) அண்ட பேரண்டங்களிலிருந்து அடிக்கடி வந்திட்ட பதினெண் சித்தர் குழு ஆண்டுக்கு ஒருமுறை ஓரிடத்தில் ஒன்றுகூடி, இவ்வையக முன்னேற்றத்திற்காக, இம் மண்ணுலக முன்னேற்றத்திற்காக, இம்மாஞாலத்தின் முன்னேற்றத்திற்காக கருத்துப் பரிமாற்றக் கலந்துரையாடல் சிந்தனை அரங்கம் நிகழ்த்திடும் இரவு,

(5) ஆதிசிவனாரின் மகன் முருகன் சேவலோன் கலைகளைப் பயில ஆரம்பித்த இரவு,

(6) ஆதிசிவனாரின் மகன் முருகன் தனது 32-வது வயதில் 'அருளுலகத்தவரும், பொருளுலகத்தவரும், பெரும் கவலைக்குள்ளாகிடும் வண்ணம் தன்னை 18-படை வீடுகளில் 'உருவ அருவ சமாதியாக' நிலைபேறு பெறச் செய்ய முடிவெடுத்த இரவு

(7) ஆதிசிவனார், தமது திருமகன் முருகனின் பரிந்துரைப்படி விண்ணுலக ஐவர் குழுவையும், மண்ணுலக ஐவர் குழுவையும் ஒன்று கூட்டி இருக்கு வேதத்திலுள்ள வாக்கு, வாக்கியம், வாசகம் என்ற மூன்றையும; அசுரவேதம், அதர்வான வேதம், யாம வேதம் மூன்றையும் தனித்தனி வேதங்களாகப் பிரித்திட ஆரம்பித்திட்ட இரவு,

(8) ஆதிசிவனார் கடலுள் மறைந்திட்ட இளமுறியாக் கண்டம் எனும் குமரிக் கண்டத்தில் இருந்திட்ட தென் இமயமலையின் அடிவாரத்தில் தென் இந்து, தென் யமுனை, தென் கங்கை என்ற மூன்று ஆறுகளும் கூடிய முக்கூடல் பகுதியில் பதினெண் சித்தர் மடத்திற்காக மோகம் சிதறு நகரைத் தோற்றுவித்து முத்தமிழ்ச்சங்கத்தை நிறுவ ஆரம்பித்த இரவு

(9) ஆதிசிவனார் முத்தமிழ் சங்கத்திற்காக 'மோகம் சிதறு நகரையும்' அருகிலிருந்த மருதமரக்காட்டில் 'மருத மரக் காட்டு நகர்' என்ற பொருளில் மருதை மாநகர் என்ற மாநகரத்தை தோற்றுவிக்க ஆரம்பித்த இரவு,

(10) ஆதிசிவனார் இந்து வேதத்திற்காகவும், இந்துமதத்திற்காகவும் பதினெண் சித்தர் மடத்தையும், பீடத்தையும் நிறுவுவதற்காக மோகம் சிதறு நகரிலிருந்து சிலகல் தொலைவில் 'அருட்பா நகர்' என்ற நகரைத் தோற்றுவிக்க ஆரம்பித்த இரவு,

*(11)* ஆதிசிவனர், உருவாக்கிய பதினெண் சித்தர் மடத்தில் இந்துவேத நூல்களையும், பதினெண் சித்தர் பீடத்தில் இந்து மத நூல்களையும் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான முத்தமிழ் மூலம் கற்றுத் தேர்ந்து 'மணீசர்' என்ற நிலையிலிருந்து பக்குவப்பட்ட மனதையுடைய மனிதர்களாக மாறிட்டவர்களுக்கு முதன்முதல் அருட்பட்டங்கள் வழங்கிட்ட இரவு,

*(12)* ஆதிசிவனர், விலங்குகளோடு, விலங்குகளாக திரிந்திட்ட மணீசர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கைக்குரியவர்களை அழைத்து முத்தமிழ்ச் சங்கத்தில் சேர்த்து கல்வி கற்பித்திட, ஆரம்பித்திட்ட இரவு,

*(13)* இருக்கு வேதம் முறையாக அசுர வேதம், அதர்வான வேதம், யாமவேதம் என்று மேலும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டு; இந்த மண்ணுலகில் மட்டுமே நான் வேதமாக வடிவப்பட்டு, 1359 அண்டங்களுக் கும் அறிவிக்கப்பட்ட இரவு,

*(14)* இந்த ஞாலம், எரிகின்ற நெருப்புக் கோளமாக இருந்து எரிதல் அடங்கி, கங்காக, நெருப்புக்கனலாக, மாறியதும், நெருப்புக் கனல் பனிக்கட்டியாகமாறியதும், பனிக்கட்டி நீராக மாறியதும், நீர் நிலமாக மாறியதும், நிலத்தில் உயிரணுக்கள் தோன்ற ஆரம்பித்த தும் இந்த சிவராத்திரி எனப்படுகின்ற மாசி மாதம் தேய்பிறையில், சதுர்தசி இரவு பதி னன்கு நாழிகைக்குரிய இலிங்க வடிவகால இரவே மகாசிவராத்திரி என்றுகுறிப்பிடுகிருர் கள். அதாவது, ஆவி, ஆருயிர், ஆன்மா என்ற மூன்றும் ஒருங்கிணைந்து இலிங்கவடிவில் **சீவன்** உருவான இரவே **சீவராத்திரி** எனும் சிவராத்திரியாகும். அதாவது, இந்த சீவன்தான் அருவுருவ நிலையிலிருந்து உருவ ருவ நிலை பெற்று மணீசனக மாறிற்று. இப்படி மணீசன் தோன்றுவதற்குரிய சீவன் தோன்றிய இரவு சீவஇரவு அதுவே சீவ ராத்திரி, சிவராத்திரி என்று அண்ட பேரண்ட மாளும் பதினெண் சித்தர்கள் குறிக்கின்றுர் கள்.

## சிவராத்திரி அன்று செய்ய வேண்டியது :

எனவே, இந்துக்கள் அனைவரும் மகா சிவராத்திரி அன்று காலையிலிருந்து மறுநாள் காலை வரை உள்ள 24 மணி நேரத்தில், ஒரு சில மணித்துளிகளாவது தங்கள் ஊரில் உள்ள சுடுகாட்டிற்குச் சென்று நமது இந்துமதக் கடவுளர்களுக்கெல்லாம் கடவுளாக இருக் கின்ற சிவபெருமானை கும்பிட்டு வரவேண் டும். அத்துடன் தங்களுடைய மாண்டுபோன முன்னோர்களை நினைத்து அவர்களுக்கு விருப்ப மான பலகாரங்களையும், உணவு வகைகளையும் சமைத்து எடுத்துக் கொண்டு, தேங்காய்' பழம், பூ, ஊதுபத்தி, கற்பூரம், சாம்பிராணி, வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு, சந்தனம், குங்குமம், திருநீறு, மஞ்சள் முதலியவைகளை எல்லாம் எடுத்துச் சென்று சுடுகாட்டில் ஏதே னும் ஓரிடத்தில் தண்ணீர் தெளித்து சாண மிட்டு மெழுகி, மாக்கோலம் போட்டு நெய்-

ஏதும் கல்லாத மூடருமில்லை;
எல்லாம் கற்ற அறிவாளியுமில்லை.

விளக்கு ஏற்றி, எல்லாவற்றையும் படைத்து விட்டு, தலைவாழை இலைபோட்டு படைத்த உணவில் எல்லாவற்றிலும் சிறிது அங்கே எடுத்து வைத்துவிட்டு மீதியை எடுத்துக் கொண்டு நேராக சிவன் கோயிலுக்குச்செல்ல வேண்டும்.

அங்கு கொடிமரத்தின் முன் அனைத்தையும் வைத்துவிட்டு தங்களுக்குத் தெரிந்த சிவன்பாடலை (அ) சிவகாயந்திரியை உரத்த குரலில் ஓதியபடியே ஐந்துமுறை வலம் வர வேண்டும். பின் பலிபீடம், நந்தியையையும் கும்பிட்டு விட்டு நேரா்க அம்மன் சன்னதிக்கு சென்று வழிபடவேண்டும். பிறகு கருவறையில் உள்ள சிவனை வழிபட வேண்டும். அதன் பிறகு மற்ற தெய்வங்களை வணங்கி விட்டு கோயிலில் உள்ள குரு, குருக்கள், குருமார், பூசாரி, அர்ச்சகர் என்றுள்ள அனைவரின் காலைத்தொட்டு விழுந்து கும்பிட்டு வாழ்த்துப் பெற்று வீடு திரும்ப வேண்டும்.

வீட்டிற்கு வந்தபின் குத்து விளக்கு ஏற்றி ஊதுபத்தி (அ) சாம்பிராணி புகையிட்டு சிவபெருமானையும், தங்களுடைய மாண்டு போன தங்களது குல முதல்வர்களையும் நினைத்து சிறிதுநேரம் பூசையில் அமர்ந்தபின் அந்தபடையலை அனைவரும் உண்ணலாம். மற்றவருக்கும் தரலாம்.

**ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்**

# சிவராத்திரி பற்றி இந்துவேதம் கூறும் முதன்மையான கருத்து

ஆகாய கன்னி கங்கை ஏற்ற இரவாம்
மாக்கடல் கடைந்த நஞ்சுண்ட மரண இரவாம்
ஏகாயம் எண்ணற்ற கோடி தோற்றுவித்த இரவாம்
கூகா என பிறர்கூடி அழா வண்ணம்
சாகா வரங்கள் வழங்கும் வகைதரு சிவராத்திரி
வாகாகக் கொண்டாடி தோதாகப் பிறவித்துயர் போக்கிடலாம்.

(இருக்குவேதம் 3 : 7 : 23)

## சிவ (சீவ) காயந்திரி மந்திரம்

தத்துவப் பிறப்பாய வித்தே! மகேசா!
மகாதேவே! நீ தீயே யாகி
தன்னேடு உருத்திரப் பிறப்பைச் சாதித்தாய்;
என்னேடு உன்னேடன்றி எங்கும் அருளூற
ஓம் நமச்சிவாய சிவாயநம ஒலியருளினுய்;
தழைத் தெழுநீ! நாங்கள் பிழைத்தெழ அருளுநீ!
அழைக்கிறோம்! செழுந்தீயே! செழித்தெழுநீ!
வாசிவாசி! வாசிவாசி! வாசிவாசி!
வசிவசி! வசிவசி! வசிவசி!
ஓம் காயந்திரிந்து சிவமாகட்டும்;
ஓம் ஆவி, ஆன்மா, ஆருயிர் ஒன்றுகட்டும்;
தத்துவமே! நமச்சிவாய மென்றுணர்ந்தோம்
சித்தாந்தமே! சிவாயநம வென்றுணர்ந்தோம்
நங்! மங்! சிங்! வாங்! யங்!
காத்தருளுக! காத்தருளுக! காத்தருளுக!
ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!

# கேள்வி-பதில்

❀ ஓதி ஓதி உணர்தல் என்றுல் என்ன?

செ. மாரிக்கனி - மதுரை.

ஓதிஓதி உணருதல் என்றுல் ஓதுவதற்கென்று இந்து வேதத்தில், இந்துமதத்தில் கூறப்பட்டிருக்கக்கூடிய பூசைமொழி வாசகங்களும், மந்தரம், மந்திரம், மந்திறம்,... எனப்படும் இருபத்துமூன்று வகைகளை அவரவர் எதிர்பார்ப்புக்கேற்ப, அதாவது, எதிர்பார்க்கின்ற பயனுக்கேற்ப ஒரு நாளைக்குரிய பத்து யாமங்களில் (சாமங்களில்) யாமத்தின் ஆரம்பத்திலிருந்து ஓத வேண்டுமா?(அ)யாமத்தின் இடையிலிருந்து ஓத வேண்டுமா? (அ) யாமத்தின் இறுதியிலிருந்து ஓத வேண்டுமா? என்பதை தெரிந்து ஓத வேண்டும். ஓதும்போது எப்படிப்பட்ட உடைகளை உடுத்திருக்க வேண்டும். என்ன உணவுகள் உண்டிருக்க வேண்



மனம் தானே அடங்க வேண்டும் என்பவன் அறிவுடையான்.

டும். என்னென்ன படையல்களை படைக்க வேண்டும். யார்யார் துணை இருக்க வேண்டும் (அ)இருக்கக் கூடாது; எந்த இடத்தில், எந்த திசையைப் பார்த்து ஓத வேண்டும், கிடந்து (படுத்து) ஓத வேண்டுமா? அமர்ந்து ஓத வேண்டுமா? நின்று ஓதவேண்டுமா? என் பதையெல்லாம் தெரிந்துக்கொள்ளவேண்டும். குருவால் இட்டும், தொட்டும், சுட்டியும் விளக்கப் பெற்றும் தீட்சைப் பெற்றுதான் ஓத வேண்டுமா (அ)அவரவராக ஓதலாமா? என்று தெரிந்துதான் ஓதவேண்டும். இவ்வளவு செய்திகள் இருக்கு வேதம், அசுர வேதம், அதர்வானவேதம், யாமவேதம் எனும் நான்கு வேதத்திலும், அவையவைகள் குறிப்பிட்ட நேரத்தில்தான் ஓதவேண்டும். அப்படி, ஓதுவதன் மூலம் காலப்போக்கில் கிடைக்கக்கூடிய துய்ப்புணர்வுகளால் உணர்வதுதான் ஓதிஓதி உணர்தல். அதாவது, ஓதிஓதி உணருவதை ஓதாமல் பெறமுடியாது' இங்கு ஓதுதல் என்ருல் வாய்திறக்காமல் ஓதுவதா? வாய்திறந்து ஓதுவதா? உரக்க ஓதுவதா? என்ற நுட்பங்களையும் தெரிந்திருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு மேலும் ஐயம் இருக்குமென்ருல்; இந்து வேதத்திற்கு நாயகமாகவும், இந்து மதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடமாகவும் விளங்குகின்ற பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதி, பதினெண் சித்தர் பீடத்தின் பீடாதிபதி அவர்களிடம் தெரிந்துக்கொள்ளவும்.

★ எங்கு சென்ருலும், என் பிறச்சினை தீர குலதெய்வத்தை வழிபடு எல்லாம் சரியாகி விடும் என்று கூறுகிருர்களே? இது உண்மையா?

ப. செயப்பால்-திண்டுக்கல்

ஆமாம். உலகிலேயே இந்து வேதத்திலும், இந்துவேதமதமான இந்துமதத்திலும் தான் 1) குடும்ப ஆண்டவர்கள் 2) குல தெய்வங்கள் 3) கிராமத்து தேவர் தேவதைகள் 4) நாட்டுக் கடவுளர்கள் என்றுநான்கு வகையாக கடவுள்கள் பகுக்கப்பட்டிருக்கிருர்கள். இந்த நான்குவகையாக பகுக்கப்பட்ட கடவுள்களை வழிபடுவதற்குரிய, பூசை செய்வதற்குரிய பூசை மொழிகள், பூசை விதிகள், நெறிமுறைகள், சடங்கியல்கள்...முதலிய அனைத்தும் நான்கு வேதங்களிலும் கூறப்பட்டிருக்கின்றன. இது மட்டுமல்லாமல் இந்த நான்கு வேதங்களில் தான் கடவுள்களில் 8,64, 736 வகைப்பட்ட கடவுள்கள் இருக்கிருர்கள் என்ற பேருண்மையையும், ஒவ்வொரு வகைக்கும்

எல்லாவற்றையும் எல்லாரிடமும் சொல்லுபவன் கோமாளி.
எதையும் எவரிடமும் சொல்லாதவன் ஏமாளி.

கோடிக்கணக்கான கடவுள்கள் இருக்கிறார்கள், இவர்களில் ஆண் கடவுள்கள், பெண் கடவுள்கள், அலிநிலை கடவுள்கள் என்ற மூன்று வகை இருப்பதுப் பற்றிய பேருண்மையையும், இக் கடவுள்களில் பிறந்த கடவுள்கள், பிறக்கக் கூடிய கடவுள்கள், பிறப்பெடுக்கக் கூடிய கடவுள்கள் பற்றிய பேருண்மைகளும் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. எனவேதான், ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும், இந்த கடவுள்களுடைய துணை இருந்தால்தான் வரக்கூடிய எல்லாவகையான பாதிப்புக்களையும், தோல்விகளையும், துன்பங்களையும், துயரங்களையும் தடுத்து அகற்றிக் கொள்ளமுடியும்.

குறிப்பு :

பதினெண்சித்தர் மடத்தின் தலைமைப் பணியாளர் சித்தர் யோகமுனிக்கு மாதாமாதம் நூற்றுக்கணக்கில் குவியக்கூடிய கேள்விகளில் மிகச் சிறந்த கேள்விகளுக்கு மட்டுமே இங்கு பதில் வழங்கப்படுகிறது. ஆனால், இப்பதில் குருமகாசன்னிதானம், குவலய குருபீடம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்களிடம் அவ்வப்போது விளக்கம்கேட்டு அவர் திருவாய் மலர்ந்தருளும் கருத்துக்களின் தொகுப்புத்தான் சுருக்கமாக இங்கு வெளியிடப்படுகிறது. எனவேதான், இங்கு தரக் கூடிய பதிலில் பல்லாயிரக்கணக்கான கேள்விகளுக்கு பதில் அடங்கியிருக்கிறது. இதைப் புரிந்து இந்துஆரணம் வாசகர்கள் தங்கள் தங்களுடைய கேள்விகள், தங்கள் தங்களுடைய முகவரிகளுடன் இந்து ஆரணத்தில் வெளியிடப்பட்டு பதில் எழுதப்படவில்லையே என வருந்தக்கூடாது; என்பதை தெரிவிக்கப் படுகிறது. ஏனெனில், நமது இந்துஆரணம் உலகமுழுவதுமுள்ள இந்துக்களால் படிக்கப் படுகிறது. அதனால், அயல்நாடுகளில் உள்ள இந்துக்களுக்கெல்லாம் இந்துவேதம் பற்றியும், இந்து மதம் பற்றியும் விளக்கம் கூறும் வண்ணம்தான் கேள்வி-பதில் பகுதி இந்து ஆரணத்தில் வெளி வருகிறது. ஒரு மாதத்திற்கு ஒரு கேள்விக்குத்தான் பதில் சொல்ல முடிகிறது. ஆர்வமுள்ளவர்கள் தாராள நெஞ்சத்தோடு ஏராளமான உதவிகளை திரட்டி இந்து ஆரணத்திற்கு அனுப்பினால், இந்து ஆரணம் மிகப்பெரிய அளவில் வெளி வரும். காணிக்கையும், நன்கொடையும் மட்டும் பயனளிக்காது. இந்து ஆரணத்திற்கு சந்தாதாரர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கும் பணியில் ஈடுபடவேண்டும். முடிந்தவர்கள் இந்து ஆரணம் மாதஇதழை தங்கள் தங்கள் வட்டாரங்களில் விற்றுக் கொடுக்கக் கூடிய பணிகளில் ஈடுபடவேண்டும்.

தண்டனை வழங்கும் நீதிபதி அல்ல இறைவன்
கண்டிப்புக் குரல் கொடுக்கும் பெற்றோர் போன்றவனே இறைவன்.

# இந்து வேதத்தையும் வேத மதத்தையும் புரிந்து கொள்ளுங்கள்

5. "இந்துமத நாகரிகத்தை மறுமலர்ச்சி பெறச்செய்வோம்! இந்திய வறட்சிமிரட்சி அனைத்தையும் விரட்டி ஓட்டுவோம்".

6. 'செந்தமிழ் மொழியிலுள்ள இந்து வேதத்தை இந்திய மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்ப்போம். இந்து மதத்தவர்க்கிடையில் உள்ள அறியாமைகள் புரியாமைகள், தெரியாமைகள் அனைத்தும் அகற்றுவோம்".

7. "செந்தமிழாசிரியர்களை இந்து வேத ஆச்சாரியார்களாக்கி இந்தியா முழுது மனுப்பி இந்துவேதம் பரப்புவோம் இந்தியர் அனைவரிடமும் விந்தைமிகு பந்தபாச இந்துமத ஒற்றுமையுணர்வை விளைவிப்போம்".

8. "இந்துவேதமே (இந்துக்களின்) இந்தியரின் அகவாழ்வின் வறுமைகளையும், வெறுமைகளையும்; ஏக்கங்களையும், ஏமாற்றங்களையும் போக்கிடும்! நீக்கிடும்! நீக்கிடும் போக்கிடும்!!"

9. "இந்துமதமே இந்தியாவின் புறவாழ்வில் உள்ள மேனாட்டு மோகப் போதையை அகற்றி அடிமை நிலையை, மிடிமை நிலையை விரட்டியோட்டிடும்!

10. "இந்துக்களே! இந்து வேதத்தையும், இந்துமதத்தையும் புரிந்து கொண்டால் தான் இந்தியாவைக் காப்பாற்ற முடியும்! இந்தியப் பண்பாட்டைக் காப்பாற்ற முடியும்! இந்திய நாகரிகத்தைக் காப்பாற்ற முடியும்!!!........"

இந்தப் பத்து கருத்து முழக்க வாசகங்களே போதும்; இந்துவேத நாயகம், இந்து மதத் தந்தை, அவர்கள் 'இன்றைக்கு யாருக்குமே இந்துவேதம் பற்றியும், இந்து மதம் பற்றியும், அக்கரையில்லாவிட்டாலும்; தாம் மட்டும் தனித்துத் தமது திருமடத்தின் அடியார், அடியான், கூட்டத்துடன் இந்து வேதத்தையும், இந்துமதத்தையும் மறுமலர்ச்சி அடையச் செய்யவும்!; வளவளர்ச்சி அடையச் செய்யவும்!! ஆட்சி, மாட்சி, மீட்சி பெறச் செய்யவும்!!!.... முயலுகிறார்! முயன்று கொண்டே இருக்கிறார்! என்பதை புரிந்து கொண்டிட.

(a) "இன்றைக்கு யார் தமிழை மதிக்கிறார்கள்?" என்று ஐய வினா எழுப்பப்பட்டிருக்கிறது. அதாவது, "இன்றைக்கு யாருமே தமிழை மதிக்கவில்லை". இப்படிப்பட்ட இந்த காலத்தில்; அந்தணர் அண்ணல், ஞானச்

சாரியார் அவர்கள், ஏன், தமிழின் அருமை பெருமைகளையும், உரிமைகளையும் அரிய சிறப்புக்களையும் எடுத்துக் கூறிடும் பணியில் முழு மூச்சாக ஈடுபட்டுத் தமது கருத்தையும், காலத்தையும், முயற்சியையும் வீணுக்கிக் கொண்டிருக்கின்ருர்?'' என்பதே பலருடைய ஐய வினுவாக; முணுமுணுப்பாக; மறைமுக இடித்துரையாக, பரிதாபப் பரிந்துரையாக.... இருக்கின்றது. இதற்கு, அந்தணர் அண்ணல் ஞானுச்சாரியாரின் ஒரேபதில்; இன்றைக்குத் தமிழர்களே!; தமிழ் மொழியின் அருமை' பெருமை, அரிய, பெரிய தெய்வீக ஆற்றல் தொன்மை, மேன்மை, நுண்மை, திண்மை ஒண்மை.... முதலியவைகளை எண்ணிப் பார்க்க விரும்பாமலும்; நம்பிச் செயல்படாமலும், இருக்கின்ருர்கள்;- என்ற பேருண்மை வியப்பையும், வேதனையையும் தருகிறது. (2) அதைத் தாங்க முடியாமலேயே முழுமையாக தமிழுக்கு உழைக்கப் புறப்பட்டிருக்கிருேம் என்று கூறுகிருர். மேலும் அவரே இந்தநிலை தமிழுக்கு ஏன் வந்தது? இது, இயல்பாகத். தாஞக வந்த சொந்தநிலையா? அல்லது வேறு யாராவது நன்கு திட்டமிட்டுத் தந்த நிலையா?.... "இன்றைக்கு யார் தமிழை மதிக்கிருர்கள்? யார் யார் தமிழை மதிக்கவில்லை? ஏன்? எதற்காக? எவ்வாறு?.... என்று விஞக்களை எழுப்பி விடைகண்டு அவற்றினடியாகச் செயல்படுகிருேம்'' என்றும் கூறுகிருர்.

(உ) முதலில் இன்றைக்கு "யார் யார் தமிழை மதிக்கிருர்கள்? யார், யார் தமிழை மதிக்கவில்லை? என்று பட்டியலிட்டு ஆராயும் போது தான், "தமிழை மதிப்பதால் ஏற்படக் கூடிய ஈட்டம் என்ன?'' 'தமிழை மதிக்காததால் ஏற்படக்கூடிய இழப்பு என்ன? பாதிப்பு என்ன?'.... என்று விஞவெழுப்பிச் சிந்திக்க நேரிட்டது'' என்று மிகத் தெளிவாகத் தமது முயற்சிகளின் வரலாற்றைக் கூறுகிருர் ஞானுச்சாரியார், அவரது, முயற்சிகளின் வரலாறு நான்குயுக வரலாருக, மிகப் பெரிதாக விரிகின்றது.... .... ....

(ரு) 'இன்றைய நிலையில், தமிழ் நாட்டிலும் சரி, இந்திய நாட்டிலும் சரி; .... தனி மனிதர்களும், தலைவர்களுடனுள்ள அமைப்புகளும், அரசாங்கமும்.... 1) 'தாய் நாடு', 2) 'தாய்மொழி', 3) 'தாய் நாட்டுப் பண்பாடு', 4) தாய் நாட்டு நாகரிகம் 5) தாய்நாட்டு ஒற்றுமை 6) 'தாய்நாட்டு நல்வாழ்வு' 7) 'தாய்நாட்டு முன்னேற்றம்' 8) 'தாய்நாட்டின் வருங்காலம்' .... என்று எதையுமே எண்ணிப் பார்த்துச் செயல்படக்கூடிய நிலையில் இல்லை!' இதுதான், இன்றைய இந்தியாவின் உண்மையான நிலை! உண்மையான நிலை!! உண்மையான நிலை. இதற்குக்காரணம் என்ன? என்று ஆராயும் போதுதான்; இன்றுள்ள பெரும்பாலான மக்கள்; அதாவது ஆண்டி முதல் அரசாளும் பொறுப்பில் உள்ளவர் வரை ஏறத்தாழ எல்லோருமே; தானென்ற அகம்பாவம், ஆணவம், வம்பு, வீம்பு, போட்டி, குறுகிய தன்னல வெறி, தனக்கென்ற பேராசைவெறி....முதலிய அற்ப உணர்வுகளுக்கும், உந்துதல்களுக்கும் அடிமையாகி விட்டார்கள்! இப்படிப்பட்ட அவலமான, கேவலமான நிலையிலிருந்து வீட்டையும், நாட்டையும் காப்பாற்ற வேண்டும்! காப்பாற்றவேண்டும்!! காப்பாற்றவேண்டும்!!! காப்பாற்றியே யாக வேண்டும்! அதற்கு என்னென்ன செய்ய வேண்டும்? அவற்றை எப்படியெப்படிச் செய்ய வேண்டும்? யார் யார் மூலம் செய்ய வேண்டும்?.... என்றெல்லாம் முறையாக எண்ணியெண்ணிப் பார்க்கும் போது தான்; 'அனைத்து வகைப்பட்ட குறைகள்,

அஞ்சி அஞ்சி சாகாதே.
கெஞ்சி கெஞ்சி வேகாதே.

குழறுபடிகள்!! குழப்பங்கள்!!! குறுக்கீடுகள்!!!! தந்தகங்கள்!!!.... தவறுகள்!!!.... பிழைகள்!!!.... இழிவழிவுகள்!!!.... தீமைகள்!!!.... முதலிய அனைத்தையும் 'வேருடன் களைய வேண்டும்'! 'முழுமையாக அகற்ற வேண்டும்'!.... அதற்கு ஒரே ஒரு வழி 'நம் மக்களுக்கு ஆன்மீக உணர்வை ஊட்ட வேண்டும்'. அதற்காக, 'இந்துவேதம்; இந்து வேத பாட சாலைகளிலும், குரு குலங்களிலும், திருகுலங்களிலும், தருகுலங்களிலும், கருகுலத்திலும்.... மட்டுமே ஓதப்படலும், ஓதுவிக்கப்படலும்; கற்றலும் கற்பிக்கப்படலும்; பயிலலும் பயிற்றுவித்தலும் நிகழுதலோடு எல்லாக்கல்வி, கலை, தொழிற் கல்வி, ஆய்வுமன்றம், ஆராய்ச்சி நிறுவனம் .... முதலிய அனைத்திலும் இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும் முதன்மையான இடம் பெறவேண்டும். இம்மண்ணுலகில், இன்று கி.பி. 199-4இன் கணக்குப்படி; 43,73,095 ஆண்டுகளுக்கு முன்னால்; பதினெண் சித்தர் பீடாதிபதி ஆதிசிவனார் அருளிய இந்துவேத நூல்கள் (396) முன்னூற்றுத் தொண்ணூற்று றும்; இந்துமத நூல்கள் (36) முப்பத்தாறும் வழங்கும் 1) 'தனிமனித வாழ்வு பற்றிய ஒழுகலாறு', 2) 'குடும்ப வாழ்க்கை பற்றிய ஒழுகலாறு', 3) 'சமுதாய வாழ்க்கை பற்றிய ஒழுகலாறு', 4) 'அரசியல் வாழ்க்கை பற்றிய ஒழுகலாறு', 5) 'பிறப்பிறப்புப் பற்றிய பேருண்மைகள்' 6) 'அரிய மனித வாழ்வில் அல்லவை களையெடுக்கப்பட்டு நல்லவை விளைவிக்கப்பட்டிடக் கடைபிடிக்க வேண்டிய வாழ்வியல் நியதிகள், நீதிகள், விதிகள், நெறிமுறைகள், பழக்க வழக்க ஒழுகலாறுகள், மரபுகள், உறவுகள், உரிமைகள், கடமைகள், கண்ணியங்கள், கட்டுப்பாடுகள், பொருளாதாரக் கொள்கைகள், தொழில் கோட்பாடுகள், இல்லறப் பண்புகள், இறையியல் தத்துவங்கள், மதச் சித்தாந்தங்கள் .... முதலியவைகளால் தான், அரசாளும் பெரும் பொறுப்பில் உள்ளவர் முதல்; அன்றாடம் பிச்சை பெற்றுவாழும் ஆண்டிவரை தங்கள் தங்களுடைய வாழ்க்கையின் தன்மை, கடமை, பொறுப்பு, ஆசையின் எல்லை, உரிமை, பெருமை.... முதலியவைகளைப் புரிந்து நடக்க நேரிடும்! புரிந்து நடக்க நேரிடும்!! புரிந்து நடக்க நேரிடும்!!! அவற்றால்தான் அன்னிய மொழிகளாலும், வேதங்களாலும், வேதமதங்களாலும், அவற்றின் பண்பட்டாலும், நாகரிகத்தாலும்.... விளைந்துவிட்ட களைகள் போன்ற அவலங்களும், கேவலங்களும், இழிவுகளும், பழிகளும், அழிவுகளும், பேராசைகளும், இம்மண்ணின் பண்பாட்டுக்கும், நாகரிகத்துக்கும் விரோதமான செயல்களும், துரோகமான எண்ணங்களும், .... வேருடன் களையெடுக்கப்பட்டிடும்! அதற்கு, இந்துவேத நூல்களை ஓதுதற்குரிய தமிழ்மொழி பெரிதும் மதிக்கப்பட வேண்டும்! தமிழ்மொழியின் பெருமையும், உரிமையும் பாதுகாக்கப்படவேண்டும்!! தமிழ்மொழியைப் பெரும்பாலான ஆன்மீக ஆர்வ முடையோர் கற்றுப் பயன்படுத்திடத் தேவையான எல்லா வசதி வாய்ப்புகளும் உருவாக்கித் தரப்படல் வேண்டும்!!! கன்னியாகுமரி முனைக் கடல்பரப்பிலிருந்து, வடஇமயமலைப் பெருஞ்சிகரத்தின் விளிம்பு வரை 'தமிழ் மொழியின் ஒலி ஒலிக்கவேண்டும்'! 'தமிழ்மொழியின் ஒலி ஒலித்துக் கொண்டே' இருக்கவேண்டும்.!

ஏனெனில்!

1. 'தமிழ் ஒலியே வேத ஒலி'

2. 'தமிழ் எழுத்துக்களே இந்து வேத வடிவங்கள்'

3. 'தமிழ்ச் சொற்களே இந்துவேதக் கடவுள்கள்'

4. 'தமிழ்ச் சொற்றொடர்களே! வாக்குகளே! வாக்கியங்களே! வாசகங்களே! இந்து வேதக்கடவுள்களை உயிர்ப்பித்து இயக்கும் மந்திரங்கள்'

5. 'தமிழ் மொழியே கடவுளர் மொழி! தெய்வ மொழி! தேவமொழி! ஆண்டவர்மொழி!'

6. 'தமிழ் மொழியே அருளுலக ஆட்சிமொழி!

7. 'தமிழ் மொழியை நன்கு, பிழையற்றுப் பேசுவதே கடவுள்களோடு பேசுவதாகும்.

8. 'தமிழைக் கற்பதே சிறந்த தவம்.

9. 'தமிழைக் கற்பிப்பதே சிறந்த பூசை.

10. 'தமிழ் மொழியில் பேசுவதைக் கேட்பதே சிறந்த புண்ணியம்.... என்று 'இருக்கு வேதத்தில்' மிகத் தெளிவாகப் பலநூறு வாக்குகளிலும், வாக்கியங்களிலும், வாசகங்களிலும் தமிழின், அருமை, பெருமை, அரிய கடவுட் பண்புகள், அருட்பயன்கள் விளக்கப்படுகின்றன. இதே கருத்துக்கள் 'அசுர வேதம்' (யசுர் வேதம்), 'யாம வேதம்' (சாமவேதம்), 'அதர் வான வேதம்' (அதர்வன வேதம்)ஆகிய மூன்றிலும் தெளிவாகக் கூறப்படுகின்றன. இவை மட்டுமன்றிச் சுருதி, ஆரணம், ஆகமம், மீமாம்சை எனும் நான்கிலும்; நேமம், நியமம், நிடதம், நிட்டை, நீதி, விதி எனும் ஆறிலும்; நவநாதம், பதினெண் சித்தம், முப்பத்தாறு ஓதம், தொண்ணூற்றாறு போதம் எனும் நான்கிலும்; மற்ற இந்துவேத நூல்களிலும்; இந்து மதத்தின் முப்பத்தாறு நூல்களிலும்; 'தமிழ் மொழியை'ப் பயன்படுத்தித்தான் அருட்பயன்களையும், பொருட்பயன்களையும் அடைய முடியும் என்ற கருத்து, மிகத்தெளிவாகவும், அழுத்தந் திருத்தமாகவும், வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளன. எனவேதான், இன்றைக்குத் 'தமிழ் மொழியை யார் மதிக்கிறார்கள்'? என்று கேள்வி கேட்டுச் சிந்தித்து; விரைவில், எல்லோருமே தமிழ்மொழியை மதிக்குமாறு செய்திடலாம்! செய்திடவேண்டும்! செய்திடவேண்டும்!! செய்திடவேண்டும்!!! அப்பொழுதுதான் இந்து வேதத்தாலும், இந்து மதத்தாலும், தமிழர்கள், திராவிடர்கள், இந்தியர்கள், இந்துக்கள், ஆசியாக்கண்டத்து மக்கள், உலக மக்கள்........ என்று படிப்படியாக 'எல்லா மானுடரும் அல்லவை அனைத்தும் அகற்றப் பெற்று; நல்லவையனைத்தும் நிறைவாக

அடையப்பெற்று நற்பேறு பெறமுடியும்! நற்பேறு பெறமுடியும்!! நற்பேறுபெறமுடியும்!!!. இத்தகைய அரும்பெரும்பணியில் பங்கு பெற்றிடத்தான் தமிழாசிரியர்களை அழைக்கிறார்! அழைக்கிறார்!! அழைக்கிறார்!!!.... அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் சித்தர். இந்த அழைப்பின் முழுமையான வடிவம்தான்;

"தமிழாசிரியர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்"

"தமிழாசிரியர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்"

"தமிழாசிரியர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்"....

என்ற முழக்கம்! முழக்கம்!! முழக்கம்!!! தமிழாசிரியர்களே சிந்திக்க முற்படுங்கள்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் சித்தரைச் சந்திக்கவாருங்கள்! வாருங்கள்!! வாருங்கள்!!!

க) மேலே உள்ள இந்த வினாவெழுப்பிக் கவலைப்படத் தேவையேயில்லை. ஏனென்றால், 1. 'இந்துவேத வரலாறுதான் இந்துமத வரலாறு' 2. 'இந்துமத வரலாறுதான் இந்த உலகின் முறையான முழுமையான வரலாறு' ஆனால்,'இந்த உலகவரலாறு, உலக வரலாற்று வல்லுநர்களாலும், மேதைகளாலும், நிலவியல் வல்லார்களாலும், உயிரினவியல் வல்லார்களாலும் பயிரியல் வல்லார்களாலும், மானுடவியல் வல்லார்களாலும், பொருளுலக ஆய்வு விஞ்ஞானிகளாலும் .. எவ்வளவோ காலமாக ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டும்கூட; இன்னும் முறையானதாகவும் அமையவில்லை! முழுமையானதாகவும் அமையவில்லை. அதாவது, இந்த உலக வரலாற்றில் எண்ணற்ற தெரியாமைகள், புரியாமைகள், புதிர்கள், இடைவெளிகள், குழப்பங்கள், ஐயங்கள் ..... இருந்து கொண்டே இருக்கின்றன.

(உ) அதாவது, இந்த உலகவரலாறு பற்றிய பேருண்மைகளில் பெரும்பாலானவை இன்னும் இருளில்தான் இருக்கின்றன. எனவே, "உலக வரலாற்றை ஒளியிட்டுக் காட்டக்கூடிய வல்லமை, எந்த வேதத்துக்கு; அல்லது வேத மதத்துக்கு இருக்கின்றதோ! 'அந்த வேதம்தான் இந்த உலகின் முதல் வேதம், மூத்தவேதம், மூலவேதம், ஆதிவேதம்'; 'அந்த மதம்தான் இந்த உலகின் மூலமதம், மூத்தமதம், ஆதிமதம்' ... எனவே; இந்துவேதமும், இந்துமதமும் தான் இந்த உலகில் மூலமானவையாக, மூத்தவையாக, ஆதியானவையாகக் கருதப்படும் உரிமையையும் பெருமையையும் பெறுகின்றன!

(ங) இப்படி, உலக மூலமாய், முதலாய், ஆதியாய் விளங்கும் இந்துவேத நூல்களும், இந்துமதநூல்களும் எவரால் எழுதப்பட்டன? எப்பொழுது எழுதப்பட்டன? என்ன மொழியில் எழுதப்பட்டன? அந்தமொழி, பிணி, மூப்பு, சாக்காடு என்று மூன்று நிலைகளையும் வென்றுவாழும் தெய்வீக மொழியாயிற்றா?

அந்தமொழியைத் தாய்மொழியாகப் பெற்ற இனத்தாரில் வாழையடி வாழையென அருளாளர்கள் தோன்றுகிறார்களா? தோன்றிக் கொண்டிருக்கின்றார்களா? வேதமொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களே; அதாவது, வேதமொழியைத் தாய்மொழியாகக் கொண்ட இனத்தவர்களைச் சந்திக்கக் கடவுள்கள், தெய்வங்கள், தேவர் தேவதைகள் ஆண்டவர்கள்... முதலியோர் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்றார்களா?... என்கின்ற வினாக்களை எழுப்பிச் சிந்தித்தும், ஆய்வுகள் நிகழ்த்தியும் உண்மையான வேதமொழி எது?; உண்மையான தெய்வீக மொழி எது? தேவமொழி எது? ஆண்டவர் மொழி எது? ... என்று முடிவுகட்ட வேண்டும். அப்பொழுது தான், இம்மண்ணுலகில், பதினெண் சித்தர்களால் அருளப் பெற்ற; அவர்களுடைய தாய் மொழியும்; அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான; 'அருளூறு, அமுத, தெய்வீகச் செந்தமிழ் மொழிதான் வேதமொழி!' என்ற பேருண்மை விளங்கிடும்!

(ச) இப்படி, 'இந்த உலகிலேயே, அருளூறு அமுத தெய்வீகச் செந்தமிழ் மொழி தான் 'வேதமொழி' 'தேவமொழி', 'தெய்வ மொழி,' 'ஆண்டவர்மொழி', 'கடவுள்மொழி' .... என்ற பேருண்மை ஆராய்ச்சிப் பூர்வமாக மெய்ப்பிக்கப்பட்டு விடுகிறது! மெய்ப்பிக்கப் பட்டு விட்டது என்கின்ற போது! இனிமேல், '' 'இந்துவேதம் தமிழ்மொழியில்தான் முதன் முதல் வெளியிடப்பட்டது' — என்ற பேருண்மையை யார் வரவேற்கப் போகிறார்கள்?'' என்று வினா எழுப்பிக் கவலைப்படவோ! கலக்கப் படவோ! தயக்க மடையவோ! ... தேவையில்லை! தேவையில்லை!! தேவையில்லை!!! தேவையே இல்லை. ஏனெனில், இந்த உலகில் எந்த ஒரு மொழியினரிடையேயும், எந்த ஒரு மொழிக்குரிய நாட்டிலேயும் கடவுள் அறுபத்து நான்கு முறை நேரில் தோன்றி அருள் புரியவில்லை! கடவுளின் அருள் பெற்று நாயன்மார்கள் அறுபத்துமூவர், நொகையடியார்கள் தொண்ணூற்றூறு பேர்கள், ஆழ்வார்கள் பன்னிரண்டு பேர்கள், தாயுமானவர்கள், பட்டினத்தார்கள், அருணகிரியார், இரமலிங்க அடிகளார் ... என்று பட்டியலிடுமளவிற்கு அருளாளர்கள் தோன்றிக்கொண்டே இருக்கவில்லை. எனவே, இனிமேல் உலகோர் அனை வருமே இந்துவேதம் தமிழ்மொழியில் தான் முதன்முதல் (எழுதப்பட்டது) வெளியிடப் பட்டது' என்ற உண்மையை ஒப்புக்கொள்வார்கள்! ஒப்புக்கொண்டே தீருவார்கள்!!! ஒப்புக் கொண்டேயாகவேண்டும்.

(தொடரும்)

# இந்து வேதமும், இந்து மதமும் அருளப்பட்ட முத்தமிழ் மொழி

பதினெண் சித்தர்களின் தாய்மொழியும், அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழி; 'முத்தமிழ் மொழி' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றுத் திகழ்வது பற்றிய காரணங்கள் இந்துவேதமான இருக்குவேதத்தில் மிகமிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன,

அதாவது,

1. 'இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழிதான் எல்லா வகையான தரங்களையும், திரங்களையும், திறங்களையும் பெற்றுத் திகழ்கிறது என்பதனுல் முத்தமிழ் மொழி என்று சிறப்பாக அழைக்கப்படுகிறது' என்றும்;

2. 'இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழியின் எழுத்துக்களில் மெய்யெழுத்துக்கள் எனப்படும் இம்மொழிக்கு உடல்போன்ற எழுத்துக்கள் வல்லினம், மெல்லினம் இடையினம் என்ற மூன்று பெரும்பகுப்புக்களைப் பெற்றுத் திகழ்வதால்தான், முத்தமிழ்மொழி என்று சிறப்பாகக் குறிக்கப்படுகிறது' என்றும்;

3. 'இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ்மொழியின் உயிரெழுத்துக்கள் எனப்படும் இம்மொழிக்கு உயிர் போன்ற எழுத்துக்கள்; குறில் என்றும் (குட்டெழுத்துக்கள்) நெடில் என்றும் (நெட்டெழுத்துக்கள்) ஆயுதம் (ஆயுத எழுத்து) என்ற மூன்று பெரும் பகுப்புகளைப் பெற்றுத் திகழ்வதால் "முத்தமிழ் மொழி" என்று சிறப்பாகப் பாராட்டப் படுகிறது' என்றும்;

4. 'இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ்மொழி மனிதர்கள் பெற்றுத் திகழும் ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றின் வடிவமைப்புக்களையும் வாழ்வியல் நிலைகளையும் இவை மூன்றும் இணைந்துதான் சீவன் உருவாகின்றது என்ற பேருண்மையினையும் தெள்ளத்

தெளிவாக, துல்லிசமாக, திட்டவட்டமாக, நுட்பமாக, வரையறுத்து ஒட்பத்துடன் விளக்குவதால் முத்தமிழ்மொழி என்று போற்றப்படுகின்றது என்றும் இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழியில்தான் மனிதரில் காணப்படுகின்ற ஆண், பெண், அலி என்ற மூன்று வகைப்பட்டவர்களுடைய சிவனை முறையே சிவலிங்கம், சத்திலிங்கம், இலிங்கம் என்று வகைப் படுத்திப் பெயரிட்டுக் காட்டப்படுகின்றன என்பதால் முத்தமிழ் மொழி என்று சீராட்டப் படுகின்றது' என்றும்;

5. 'இந்த அருளூறு அமுத தெய்வீக செந்தமிழ்மொழியில் தான் மனிதருக்கு, முற்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்பு என்ற மூன்று வகைப்பட்ட பிறப்புக்கள் உண்டு என்ற பேருண்மை திட்டவட்டமாக, அழுத்தந்திருத்தமாக, ஆணித்தரமாக விளக்கப்படுகிறது என்பதால் முத்தமிழ்மொழி என்று புகழப்படுகிறது என்றும்',

6) 'இந்த அருளூறு அமுத தெய்வீக செந்தமிழ் மொழியில்தான் குழந்தை பிறதந்வுடன் அக்குழந்தை எப்போது இறக்கும்? எப்படியெப்படி வாழும்? என்னென்ன சாதனைகளையும், போதனைகளையும் உருவாக்கும்? என்னென்ன வயதில் என்னென்ன வகையான இன்பங்களையும், துன்பங்களையும், இழப்புக்களையும், ஈட்டங்களையும், நன்மைகளையும், தீமைகளையும், அழிவுகளையும், செழிப்புகளையும், மெலிவுகளையும், வலிவுகளையும், நலிவுகளையும் பொலிவுகளையும், நோய்களையும் நொடிகளையும்... என்று கணித்திடுவதற்குரிய ஐந்தர நூல்களையும், ஐந்திர நூல்களையும், ஐந்திற நூல்களையும் பெற்றுத் திகழ்கிறது என்பதால் முத்தமிழ்மொழி என்று சிறப்பாகக் குறிக்கப்படுகிறது என்றும்,

7) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் உயிர் (பசு) இறை(பதி), தளை (பாசம்), என்ற முப்பெரும் உண்மைகள் சான்றுகளோடும், ஊன்றுகளோடும் தெள்ளத் தெளிவாக விளக்கப்படுகிறது என்பதால் முத்தமிழ் மொழி என்று புகழ்ந்து போற்றிக் குறிக்கப்படுகிறது என்றும்',

8) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் அருளுலகச் சத்தியினை, உள்ளத்து உணர்வினைப் பெறும் சத்தி (இச்சாசத்தி), உடலின் உழைப்பால் பெறும் சத்தி (கிரியா சத்தி), அறிவின் உழைப்பால் பெறும் சத்தி(ஞான சத்தி) என்று மூன்று பெரும் வகையாகப் பகுத்துக் காட்டப்படுகிறது என்பதால் முத்தமிழ் மொழி என்று சீராட்டிப் பாராட்டப்படுகிறது. என்றும்',

9) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழியில்தான் மனித வாழ்க்கையில் துய்க்கக்கூடிய, துய்ப்பதற்குரிய பக்குவமான போக நிலை, ஒருவனுக்கு உருவாவதற்கு அவனுடைய ஓகநிலை, யோகநிலை, மோகநிலை என்ற மூன்றும் உரிய அளவு அமைய வேண்டும் அல்லது பெரிய அளவு அமைய வேண்டும் அல்லது உருவாக்கப்பட வேண்டும் அல்லது அமைக்கப்பட வேண்டும் என்ற விளக்கம் வழங்கப்படுவதால்; அதாவது செந்தமிழ் மொழியில்தான் ஓகநிலை, யோக நிலை, மோக நிலையும் என்ற மூன்றும் தனித்தனியாகப் பிரித்து விளக்கப்பட்டு அல்லது இந்த மூன்றும் சரியான அளவில், சரியான பக்குவத்தில் உரிய முறைகளில் ஒன்று சேர்ந்துதான் போகநிலை உருவாகிறது என்ற முப்பெரும் கொள்கை, முப்பெரும் பேருண்மை அல்லது முப்பெரும் தத்துவம் விளக்கப்படுவதால்தான் முத்தமிழ் மொழி என்று பாராட்டிச் சீராட்டப்படுகிறது' என்றும்,

# காளி காயந்திரி மந்திரம்

ஓம் அண்டக்காளியே! பிண்டக்காளியே! பேரண்டக்காளியே!
அண்ட பேரண்டக்காளியே!
ஓம் ஏக காளியே! அநேக காளியே! மகாகாளியே! பராசரக்காளியே!
ஓம் மறைக் காளியே! முறைக்காளியே! நெறிக்காளியே! வேதக்காளியே!
ஓம் சித்தக்காளியே! நாதக்காளியே! போதக்காளியே! ஓதக்காளியே!
ஓம் சுருதிக்காளியே! ஆரணக்காளியே! ஆகமக்காளியே!
மீமாம்சைக் காளியே!
ஓம் நேமக்காளியே! நியமக்காளியே! நிடதக்காளியே! நிட்டைக்காளியே!
ஓம் ஓமக்காளியே! ஓகக்காளியே! யாகக்காளியே! யக்ஞக்காளியே!
வேள்விக்காளியே

ஓம் அனுதிசத்தியே! ஆதிசத்தியே! பாதிசத்தியே! மீதிசத்தியே!
ஓம் ஆங்காரியே! ஊங்காரியே! ஓங்காரியே! சங்காரியே!
விழிச்சியுறு நீ! எழிச்சியுறு நீ! செழிச்சியுறு நீ! மலர்ச்சியுறு நீ!
வளமாகு நீ! வலிவாகு நீ! பொலிவாகு நீ! நலமாகு நீ!

அனைத்தும் வெல்ல எனக்கு நீயே தந்திற சத்தி;
அனைத்தும் வெல்ல எனக்கு நீயே தந்திர சத்தி;
அனைத்தும் வெல்ல எனக்கு நீயே தந்தர சத்தி;
அனைத்தும் வெல்ல எனக்கு நீயே தாந்தர சத்தி;
அனைத்தும் வெல்ல எனக்கு நீயே தாந்தரீக சத்தி;

ஓம் அளீம் இளீம் உளீம் எளீம் ஐளீம்
ஓம் காளீ செய செய! ஓம் காளீ செய செய!
ஓம் சாளீ செய செய! ஓம் சாளீ செய செய!

ஓம் பாளீ செய செய! ஓம் பாளீ செய செய!
ஓம் நாளீ செய செய! ஓம் நாளீ செய செய!
ஓம் மாளீ செய செய! ஓம் மாளீ செய செய!
ஓம் வாளீ செய செய! ஓம் வாளீ செய செய!
ஓம் றீறீறீ! ஓம் றீறீறீ! ஓம் றீறீறீ! ஓம் றீறீறீ!

ஓம் ஐசுவரியே காத்திடு! ஓம் ஐசுவரியே காத்திடு!
ஓம் ஐசுவரியே காத்திடு! ஓம் ஐசுவரியே காத்திடு!
ஓம் ஐசுவரியே காத்திடு! ஓம் ஐசுவரியே காத்திடு!

ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!
ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!
ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!

# பதினெண் சித்தர்களின்

# இந்துவேத இந்துமத விளக்க வெண்பாக்கள்

## 1. மூலப் பதினெண் சித்தர்கள் வெண்பா

தாய்மொழிப் பற்றுணர்வின் விழிச்சியின் பயிற்சியும்
தாய் இனப் பாசஉணர்வின் எழிச்சியின் முயற்சியும்
தாய் நாட்டு உரிமையுணர்வின் செழிச்சியின் தேர்ச்சியும்
இந்துவேத இந்துமத உயர்ச்சியாகும்*

## 2. ஆதி சிவனார் வெண்பா (பிறவாயாக்கை பெரியோன் வெண்பா)

இந்துவேதப் புனல்ஆடி தூய்மை உற்று
இந்துமதப் படையலிட்டு மெய்மை பெற்று
சொந்தபந்த பாசமற்று உய்வு உற்று
அந்தமில் இன்பம் பெற்றிடு.

## 3. கருவூரார் வெண்பா (இறவாயாக்கை பெரியோன் வெண்பா)

இந்துவேதக் காயந்திரிகள் முறையாகக் கற்று
சொந்த பந்த பாசம் அற்று
உயிர் இறை தனை நோற்று
பிறவிப் பயன் உற்றிடு.

## 4. *கருவூரார் வெண்பா (மறவாயாக்கை பெரியோன் வெண்பா)

ஐந்தர ஐந்திர ஐந்திற கணிப்புணர்ந்தான்
சாத்தர சாத்திர சாத்திற ஏட்டறிவுற்றான்
தோத்தர தோத்திர தோத்திற பட்டறிவுநோற்றான்
† இந்துவேத இந்துமதப் பயன் பெற்றிடுவான்

தொடர்பு முகவரி :
ஆசிரியர்
இந்து ஆரணம்
நெ. 13, குமாரசாமித்தெரு,
வரதராசபுரம்,
அம்பத்தூர், சென்னை-600 053
போன் : 654447

மாவட்டந்தோறும் ஏஜென்ட் தேவை!
விளம்பர விகிதம்

| | |
|---|---|
| அட்டை கடைசிப் பக்கம் | ரூ. 1000 |
| 2-ம் பக்கம் | ரூ. 750 |
| 3-ம் பக்கம் | ரூ. 600 |
| உள்பக்கம் முழு பக்கம் | ரூ. 500 |
| அரை பக்கம் | ரூ. 250 |

ஆசிரியர் & வெளியிடுவோர் : கு. இரவிமணி நெ. 10, டிரஸ்ட்பாக்கம்
தெற்கு மந்தைவெளி, சென்னை-28